# 10.ஆம் வகுப்பு -தமிழ்-தொகைநிலைத் தொடர் பணித்தாள்

## சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

1)வேற்றுமை,வினை,பண்பு முதலியவற்றின் உருபுகள் மறைந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்பது-------- தொடராகும்.

அ)தொகாநிலை ஆ)வேற்றுமை இ)தொகைநிலை ஈ)எழுவாய்

2)தொகைநிலைத்தொடர்----------வகைப்படும்.

அ)ஐந்து ஆ)ஏழு இ)ஒன்பது ஈ)ஆறு

3)பனிக்கடல் என்பதன் இலக்கணக் குறிப்பு

அ)உவமைத்தொகை ஆ)தொகையுவமை

இ)உருவகம் ஈ)வேற்றுமைத்தொகை

4)வேற்றுமை உருபும்,பயனும் உடந்தொக்க தொகையைக் கண்டுபிடி

அ)பள்ளி செல் ஆ)மக்கள் தொண்டு இ)செய்தொழில் ஈ)தைத்திங்கள்

5)காலம் கரந்த பெயரெச்சமே----------ஆகும்.

அ)பண்புத்தொகை ஆ)வினைத்தொகை இ)வினையெச்சம் ஈ)பெயரெச்சம்

6)எண்ணல்,எடுத்தல்,முகத்தல்,நீட்டல் என்னும் நான்கு அளவுப்பெயர்களைத் தொடர்ந்து வருவது------

அ)உம்மைத்தொகை ஆ)எண்ணும்மை இ)அளவைப்பெயர் ஈ)உவமைத்தொகை

7)மார்கழித்திங்கள்,சாரைப்பாம்பு ஆகிய சொற்களில் இடம்பெற்ற பொதுப்பெயர்கள்

அ)மார்கழி,சாரை ஆ)திங்கள்,பாம்பு இ)மார்கழி,பாம்பு ஈ)திங்கள்,சாரை

8)செங்காந்தள் என்ற தொகைச்சொல்லில் மறைந்து வரும் உருபு

அ)ஆன ஆ)ஆகிய இ)போன்ற ஈ)ஐ

9)முறுக்குமீசை வந்தார் என்பது------------தொகை

அ)பண்புத்தொகை ஆ)வினைத்தொகை

இ)அன்மொழித்தொகை ஈ)இருபெயரொட்டுப்பண்புத்தொகை

10)இருபெயரொட்டுப் பண்புத்தொகையில்---பெயர் முன்னும்,--- பெயர் பின்னும் வரும்.

அ)பொது,சிறப்பு ஆ)இடுகுறி,காரணம் இ)காரணம்,இடுகுறி ஈ)சிறப்பு,பொது

LIVEWORKSHEETS